# முக்கிய குறிப்புகள்

## உயிரினங்களின் தோற்றம்

| | |
|---|---|
| **சிறப்புத் தோற்றக் கோட்பாடு** | பூமியிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஒரு தெய்வீக படைப்பு – கடந்த காலத்தில் உயிரினங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டு தோன்றி இருக்கலாம். |
| **சுய படைப்புக் கோட்பாடு (உயிரிலிப் பிறப்பு)** | உயிரற்ற பொருட்களிலிருந்து தன்னிச்சையாக உயிர் தோன்றியது.<br>**எ.கா :** மீன்கள் - சேறு, தவளைகள் - ஈரமான மண், பூச்சிகள் - அழுகும் பொருட்கள் ஆகியவற்றிலிருந்து தோன்றியதாகும். |
| **உயிர்ப் பிறப்புக் கோட்பாடு** | முன்பிருந்த உயிரியில் இருந்துதான் உயிர் தோன்றியது. |
| **வேற்றுக் கிரக (அல்லது) காஸ்மிக் தோற்றம்** | புவிக்கு அப்பால் விண்வெளியில் இருந்து உயிர் தோன்றியது. உயிரியின் அலகான ஸ்போர்கள் (பான்ஸ்பெர்மியா) புவி உள்ளிட்ட பல்வேறு கோள்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. |
| **உயிர்களின் வேதிப் பரிணாமம்** | தொடர்ச்சியான வேதி வினைகள் மூலமாக உயிர் தோன்றியது.<br>உயிரற்ற கனிம மூலக்கூறுகள் → பல்வேறு கரிம மூலக்கூறுகள் → கூழ்மத் தொகுதிகள் → உயிர் |

## பரிணாமத்தின் சான்றுகள்

| | |
|---|---|
| **புறத்தோற்றவியல் மற்றும் உடற்கூறியல்** | ***i)*** **அமைப்பு ஒத்த உறுப்புகள் :** பார்க்க வெவ்வேறாகவும், வெவ்றே பணிகளை செய்வதற்கேற்பவும் ஆனால், ஒரே மாதிரியான தோற்றமும் கொண்டவை.<br>***எ.கா :*** மனிதனின் கை, பூனையின் முன்னங்கால்.<br>***ii)*** **செயல் ஒத்த உறுப்புகள் :** பார்க்க ஒரே மாதிரியாகவும், ஒரே மாதிரியான பணிகளையும் செய்கின்றன. ஆனால் வெவ்வேறு விதமான தோற்றம் கொண்டவை.<br>***எ.கா :*** வௌவால், பறவை மற்றும் பூச்சியின் இறக்கைகள்.<br>***iii)*** **எச்ச உறுப்புகள் :** விலங்குகளின் உடலில் உள்ள உரு வளர்ச்சி குன்றிய மற்றும் இயங்காத நிலையில் உள்ள உறுப்புகள் ஆகும். ***எ.கா :*** குடல்வால், கண்ணிமைப் படலம், வால் முள்ளெலும்பு தண்டுவட எலும்பின் வால் பகுதி, போன்றவை.<br>***iv)*** **முன்னோர் பண்பு மீட்சி :** சில உயிரிகளில் மூதாதையர்களின் பண்புகள் மீண்டும் தோன்றுதல். ***எ.கா :*** பிறந்த குழந்தைகளில் காணப்படும் வளர்ச்சியற்ற வால். |
| **கருவியல்** | மீன் முதல் பாÂட்டிகள் வரை அனைத்து வகை கருக்களின் ஆரம்ப வளர்ச்சி நிலை ஒரே மாதிரியாக உள்ளது. அவற்றின் சிறப்புப் பண்புகளின் வேறுபாடு கரு வளர்ச்சியின் பிந்தைய நிலைகளில் ஏற்படுகிறது. |
| **தொல்லுயிரியல்** | புதைப்படிவங்கள் பற்றிய அறிவியல் பிரிவு. முதுகெலும்பற்றவை மற்றும் முதுகெலும்புள்ளவைகளின் பரிணாமப் பாதையைப் புரிந்து கொள்ள உதவுகின்றன.<br>**ஆர்க்கியாப்டெரிக்ஸ் :** பழங்காலப் புதைவடிவப் பறவை. ஊர்வன மற்றும் பறவைகளுக்கு இடையேயான இணைப்பு உயிரியாகும். |

## பரிணாமக் கோட்பாடுகள்

| | |
|---|---|
| **லாமார்க்கியம் (அ) மரபுவழியாகப் பெறப்பட்ட பண்புகளின் கோட்பாடு (அ) பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமைக் கோட்பாடு** | ***i)*** **உள்ளார்ந்த முக்கிய வல்லமை :** உயிரினங்களின் தொடர்ச்சியாக அளவில் பெரியதாக வளர்கின்றன.<br>***ii)*** **சூழ்நிலையும் புதிய தேவைகளும் :** மாறும் சூழ்நிலைக்கு ஏற்ப, உயிரினங்கள் சில தகவமைப்புப் பண்புகளை உருவாக்கிக் கொள்கின்றன.<br>***iii)*** **பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை கோட்பாடு :** பயன்படுத்தும் உறுப்புகள் வலிமை பெறுகின்றது. பயன்படுத்தாத உறுப்புகள் குன்றல் அடைகிறது.<br>***iv)*** **மரபுவழியாகப் பெறப்பட்ட பண்புகளின் கோட்பாடு :** பெறப்பட்ட பண்புகள் மரபு வழியாகக் கடத்தப்படுகின்றன. |

| | |
|---|---|
| **டார்வினியம் அல்லது இயற்கைத் தேர்வு கோட்பாடு** | ***i) அதிக இனப்பெருக்கத்திறன் :*** உயிரினங்கள் தங்களுடைய சந்ததியை உருவாக்கும் திறன் பெற்றவை.<br>***ii) வாழ்க்கைக்கான போராட்டம் :***<br>***அ) ஒரே சிற்றின உயிரினங்களுக்கு இடையேயான போராட்டம் :*** ஒரே சிற்றினத்தைச் சேர்ந்த உயிரிகளுக்கு இடையேயான போட்டி.<br>***ஆ) இரு வேறுபட்ட சிற்றினங்களுக்கு இடையேயான போராட்டம் :*** ஒன்றாக ஒரே இடத்தில் வாழக்கூடிய வெவ்வேறு சிற்றினத்தைச் சார்ந்த உயிரிகளுக்கு இடையேயான போட்டி.<br>***இ) சூழ்நிலை போராட்டம் :*** இயற்கை சூழலும் உயிரினங்களின் வாழ்வியலை பாதிக்கின்றன. *எ.கா :* வெள்ளம்.<br>***iii) வேறுபாடுகள் :*** சாதகமானது (பயனுள்ளது) மற்றும் சாதகமற்றது (பயனற்றது).<br>***iv) தக்கன உயிர் பிழைத்தல் (அ) இயற்கைத் தேர்வு :*** உயிர் பிழைத்து சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளும்.<br>***v) சிற்றினங்களின் தோற்றம் :*** பல தலைமுறைகளாக படிப்படியாக ஏற்பட்ட சாதகமான வேறுபாடுகளின் தொகுப்பினால் புதிய சிற்றினங்கள் உருவாகின்றன. |
| **வேறுபாடுகள்** | இது ஒரே சிற்றினத்தைச் சார்ந்த உயிரினங்கள் மற்றும் ஒரே பெற்றோரின் இளம் சந்ததிகள் ஆகியவற்றிற்கு இடையே காணப்படும் மாறுபாடுகள் ஆகும்.<br>**<u>வேறுபாடுகளின் வகைகள்</u>**<br>**1) உடலசெல் வேறுபாடு :** இவை உடல செல்களை பாதிக்கின்றன. அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுவதில்லை.<br>**2) இனசெல் வேறுபாடு :** இவை இன செல்களில் உருவாகின்றன. அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படுகின்றன.<br>***அ) தொடர்ச்சியான வேறுபாடுகள் (அ) நிலையற்ற வேறுபாடுகள் :*** படிப்படியாக நிகழும் வேறுபாடுகளின் தொகுப்பு. ***எ.கா :*** தோலின் நிறம், உயரம் மற்றும் எடை, கண்ணின் நிறம், மற்றும் பல.<br>***ஆ) தொடர்ச்சியற்ற வேறுபாடுகள் :*** இவை சடுதி மாற்றத்தினால் திடீரென தோன்றுபவை. ***எ.கா :*** ஆறு விரல்களையுடைய மனிதன் மற்றும் குட்டை கால்களையுடைய ஆன்கான் செம்மறியாடு, மற்றும் பல. |
| **தொல் தாவரவியல்** | பல நூற்றாண்டுகளுக்கு முன், பூமியில் புதையுண்ட தாவரப் பாகங்கள் பற்றி அறிதல். |
| **படிவமாதல்** | இது பாறைகளில் புதை உயிர்ப் படிவங்கள் உருவாதல் ஆகும்.<br>**<u>வகைகள் :</u>** கல்லாதல், அச்சு மற்றும் வார்ப்பு, பதப்படுத்தல், அழுத்திய சின்னங்கள், மற்றும் ஊடுருவுதல் அல்லது பதிலீட்டுதல்.<br>**<u>படிவங்களின் வயதினைக் கணக்கிடல் :</u>** இதன் வயதினை அவற்றில் உள்ள கதிரியக்கத் தனிமங்களால் கண்டுபிடிக்கலாம்.<br>**கதிரியக்கக் கார்பன்($C^{14}$) காலஅளவு முறை :** உயிரிழந்த தாவரம் (அ) விலங்கில் உள்ள கார்பன் $C^{14}$ அளவைக் கொண்டு அவைகள் எப்போது உயிரிழந்தது என்பதை அறிய முடியும். |
| **வட்டார இனத் தாவரவியல்** | ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள தாவரங்கள் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழி வழியாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிவதாகும். |
| **வான் உயிரியல் / புற மண்டல உயிரியல்** | இது அண்டத்தில் உள்ள உயிரினங்களின் தோற்றம், பரிணாம வளர்ச்சி, உயிரிகளின் பரவல் மற்றும் வேற்றுக் கிரகங்களில் உயிரிகள் இருப்பதற்கான ஆய்வு ஆகியவற்றை உள்ளடக்கியது.<br>**<u>சிறிய உயிர்கள்</u>** : மிகக் கடுமையான சூழலைத் தாங்கும் இயல்பு கொண்டவை. |

| முக்கிய விதிமுறைகள் | |
|---|---|
| ★ தொல்லுயிரியல் | புதைப்படிவங்கள் பற்றிய அறிவியல் படிப்பு. |
| ★ தொல் தாவரவியல் | பல நூற்றாண்டுகளுக்கு முன், பூமியில் புதையுண்ட தாவரப் பாகங்கள் பற்றி அறிதல் |
| ★ வட்டார இனத் தாவரவியல் | குறிப்பிட்ட பகுதியில் உள்ள தாவரங்கள் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழி வழியாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிவதாகும். |
| ★ வான் உயிரியல் (அ) புற மண்டல உயிரியல் | அண்ட வெளியில் உள்ள உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி பற்றி அறிதல் |
| ★ உயிரிலிப் பிறப்பு | உயிரற்ற பொருட்களிலிருந்து தன்னிச்சையாக உயிர் தோன்றுதல். |
| ★ உயிர்ப் பிறப்புக் கோட்பாடு | முன்பிருந்த உயிரியில் இருந்துதான் உயிர் தோன்றியது. |
| ★ தொகுதியின் வளர்ச்சி நிலை | ஒரு உயிரினத்தின் பரிணாம வரலாறு. |
| ★ தனி உயிரி வளர்ச்சி நிலை | ஒரு உயிரினத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி. |
| ★ எச்ச உறுப்புகள் | விலங்குகளின் உடலில் உள்ள உரு வளர்ச்சி குன்றிய மற்றும் இயங்காத நிலையில் உள்ள உறுப்புகள். |
| ★ முன்னோர் பண்பு மீட்சி | மூதாதையர்களின் பண்புகள் மீண்டும் தோன்றுவது. |
| ★ சிறிய உயிரி | சிறிய உயிரிகள் மிகக் கடுமையான சூழலைத் தாங்கும் இயல்பு கொண்டவையாக இருக்கலாம். |
| ★ ஆர்க்கியாப்டெரிக்ஸ் | பழங்காலப் புதைவடிவப் பறவை, ஊர்வன மற்றும் பறவைகளுக்கு இடையேயான இணைப்பு உயிரி. |

- ☞ **லியோனார்டோ டாவின்சி** – தொல்லுயிரியலின் தந்தை
- ☞ **கஸ்பர் மரியா வான் ஸ்டெர்ன்பெர்க்** - தொல் தாவரவியலின் தந்தை (1761– 1838)
- ☞ **பீர்பால் சகனி** - இந்திய தொல் தாவரவியலின் தந்தை (1891–1949)
- ☞ **J.W.ஹார்ஸ்பெர்கர்** - வட்டார இனத் தாவரவியலை அறிமுகப்படுத்தியவர்
- ☞ **ஜீன் பாப்டிஸ்ட் லாமார்க்** – மரபுவழியாகப் பெறப்பட்ட பண்புகளின் கோட்பாடு (அ) பயன்படுத்தாமைக் கோட்பாடு
- ☞ **சார்லஸ் டார்வின்** – இயற்கைத் தேர்வு கோட்பாடு
- ☞ **லூயிஸ் பாஸ்டர்** – உயிர்ப் பிறப்புக் கோட்பாடு
- ☞ **ஓபாரின் & ஹால்டேன்** – உயிரிகளின் வேதிப் பரிணாமம்
- ☞ **எர்னஸ்ட் ஹெக்கல்** – உயிர்வழித் தோற்ற விதி (அ) வழிமுறைத் தொகுப்பு கொள்கை.
- ☞ **W.F. லிபி** – கதிரியக்கக் கார்பன் அளவு முறை கண்டுபிடித்தவர்.